# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-3 - கோவைவாயாள்
**(விரும்பியபடியே காலோபாதியைக் கழித்து எம்பெருமான் தன்னைக் காட்ட, ஆழ்வார் அவனது ப்ரணயித்வ குணத்தில் ஈடுபட்டு அருளிச் செய்தல்)**

3029 * கோவை வாயாள் பொருட்டு * ஏற்றின்
எருத்தம் இறுத்தாய்! * மதிள் இலங்கைக்
கோவை வீயச் சிலை குனித்தாய்! *
குலநல் யானை மருப்பொசித்தாய்! **
பூவை வீயா நீர் தூவிப் *
போதால் வணங்கேனேலும் * நின்
பூவை வீயாம் மேனிக்குப் *
பூசும் சாந்து என் நெஞ்சமே 1

3030 பூசும் சாந்து என் நெஞ்சமே *
புனையும் கண்ணி எனதுடைய *
வாசகம் செய் மாலையே *
வான்பட்டாடையும் அஃதே **
தேசமான அணிகலனும் *
என் கை கூப்புச் செய்கையே *
ஈசன் ஞாலம் உண்டுமிழ்ந்த *
எந்தை ஏக மூர்த்திக்கே 2

3031 ஏக மூர்த்தி இரு மூர்த்தி *
மூன்று மூர்த்தி பல மூர்த்தி
ஆகி * ஐந்து பூதமாய் *
இரண்டு சுடராய் அருவாகி **
நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற * நாராயணனே! * உன்
ஆகமுற்றும் அகத்தடக்கி *
ஆவியல்லல் மாய்த்ததே 3

3032 மாய்த்தல் எண்ணி வாய் முலை
தந்த * மாயப் பேய் உயிர்
மாய்த்த * ஆயமாயனே! *
வாமனனே! மாதவா! **
பூத்தண்மாலை கொண்டு * உன்னைப்
போதால் வணங்கேனேலும் * நின்
பூத்தண்மாலை நெடுமுடிக்குப் *
புனையும் கண்ணி எனதுயிரே 4

3033 கண்ணி எனதுயிர் * காதல்

கனகச் சோதி முடி முதலா *
எண்ணில் பல்கலன்களும் *
ஏலுமாடையும் அஃதே **
நண்ணி மூவுலகும் * நவிற்றும்
கீர்த்தியும் அஃதே *
கண்ணன் எம்பிரான் எம்மான் *
கால சக்கரத்தானுக்கே 5

3034 கால சக்கரத்தோடு * வெண்சங்கம்
கை ஏந்தினாய்! *
ஞால முற்றும் உண்டுமிழ்ந்த *
நாராயணனே! என்றென்று **
ஓலமிட்டு நான் அழைத்தால் *
ஒன்றும் வாராயாகிலும் *
கோலமாம் என் சென்னிக்கு * உன்
கமலம் அன்ன குரைகழலே 6

3035 குரைகழல்கள் நீட்டி * மண்
கொண்ட கோல வாமனா! *
குரைகழல் கை கூப்புவார்கள் *
கூட நின்ற மாயனே! **
விரைகொள் பூவும் நீரும் கொண்டு *
ஏத்த மாட்டேனேலும் * உன்
உரைகொள் சோதித் திருவுருவம் *
என்னதாவி மேலதே 7

3036 என்னதாவி மேலையாய் *
ஏர்கொள் ஏழுலகமும் *
துன்னி முற்றுமாகி நின்ற *
சோதி ஞான மூர்த்தியாய் **
உன்னதென்னதாவியும் *
என்னதுன்னதாவியும் *
இன்ன வண்ணமே நின்றாய் *
என்றுரைக்க வல்லேனே? 8

3037 உரைக்க வல்லேன் அல்லேன் * உன்
உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின் *
கரைக்கண் என்று செல்வன்[1] நான்? *
காதல் மையல் ஏறினேன் **
புரைப்பிலாத பரம்பரனே! *
பொய்யிலாத பரஞ்சுடரே! *

[1] இன்ற செல்ல

இரைத்து நல்ல மேன்மக்கள்
ஏத்த * யானும் ஏத்தினேன் 9

3038 யானும் ஏத்தி * ஏழுலகும்
முற்றும் ஏத்தி * பின்னையும்
தானும் ஏத்திலும் * தன்னை
ஏத்த ஏத்த எங்கெய்தும்? **
தேனும் பாலும் கன்னலும் *
அமுதும் ஆகித் தித்திப்ப *
யானும் எம்பிரானையே
ஏத்தினேன் * யானுய்வானே 10

3039 * உய்வுபாயம் மற்றின்மை
தேறிக் * கண்ணன் ஒண்கழல்கள் மேல் *
செய்ய தாமரைப் பழனத் *
தென்னன் குருகூர்ச் சடகோபன் **
பொய்யில் பாடல் ஆயிரத்துள் *
இவையும் பத்தும் வல்லார்கள் *
வையம் மன்னி வீற்றிருந்து *
விண்ணும் ஆள்வர் மண்ணூடே[2] 11

**அடிவரவு:** கோவை பூசும் ஏக மாய்த்த கண்ணி கால குரை
என்னது உரை யானும் உய்யு மண்ணை

[2] மண்ணோடே